
# 11 மூன்று கேள்விகள்



தொண்டை நாட்டு மன்னன் ஒரு நாள் தன் அமைச்சர்களை அழைத்தார்.‘‘என் மனதில் மூன்று கேள்விகள் தோன்றியுள்ளன. அந்தக் கேள்விகளுக்குச் சரியான விடை யார் தருகிறாரோ அவருக்கே முதலமைச்சர் பதவி தரப் போகிறேன்'' என்றார். ‘‘அரசே! உங்கள் கேள்விகளைக் கூறுங்கள். விடை தர முயல்கின்றோம்'' என்றனர் அமைச்சர்கள்.

‘‘உலகத்தை விடப் பெரியது எது? என்பது என் முதற் கேள்வி'' என்றார் அரசர். அமைச்சர்கள் யாராலும் விடை கூற முடியவில்லை.

‘‘உங்கள் இரண்டாவது கேள்வியைக் கூறுங்கள். அதற்காவது விடை தர முயல்கிறோம்,'' என்றனர் அமைச்சர்கள்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

‘‘மலையை விட உயரமானது எது? இதுவே என் இரண்டாவது கேள்வி.’’ என்றார் அரசர்.

‘‘அரசே! உங்கள் மூன்றாவது கேள்வியையும் கூறுங்கள்.’’ என்று அமைச்சர்கள் கேட்டனர்.

‘‘கடலை விடப் பெரியது எது? இதுவே என் மூன்றாவது கேள்வி’’ என்றார் அரசர். எவராலும் மூன்று கேள்விகளுக்கும் விடை கூற முடியவில்லை. ‘‘இன்று இல்லாவிட்டாலும் நாளையாவது விடை கூற முயலுங்கள்’’ என்றார் அரசர்.

இதற்குச் சரியான பதிலைத் தராவிட்டால் தன் பதவி பறிபோய் விடுமோ? என்ற வருத்தத்தோடு தலைமை அமைச்சர் வீடு சென்றார். அவர் வருத்தத்தைக் கண்ட அவரது மகன் அருண்மொழி, ‘‘அப்பா உங்கள் முகத்தில் வருத்தம் தெரிகிறதே, என்ன காரணம்?’’ என கேட்டான்.
தந்தை அரசரின் கேள்விகள் பற்றிக் கூறினார்.

‘‘அப்பா! நாளை என்னை அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள். அரசரின் கேள்விகளுக்கு நான் விடை கூறுகின்றேன்’’ என்றான் அருண்மொழி.

அவ்வாறே, அருண்மொழியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றார் அமைச்சர். இச்சிறுவனா விடை கூறப் போகின்றான் என்று சந்தேகத்தோடு அமைச்சர்கள் பார்த்தனர். அரசர் சிறுவனிடம் மூன்று கேள்விகளையும் கேட்டார்.

‘‘ஆபத்துக் காலத்தில் செய்த உதவி உலகைவிடப் பெரியது.’’

‘‘செல்வம், பதவி முதலியவற்றில் உயர்வு வந்தபோதும் பணிவோடு இருப்பவனது அடக்கம் மலையைவிட உயர்ந்தது.’’


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

‘‘பயனை எதிர்பார்க்காமல் செய்யும் உதவி கடலை விடப்பெரியது,’’ என்று மூன்று கேள்விகளுக்கும் விடைகூறினான் சிறுவன்.

அரசர் மகிழ்ந்து சிறுவனைப் பாராட்டினார். அவனைத் தன் அமைச்சராகவும் ஆக்கிக்கொண்டார்.

‘‘என் கேள்விகளுக்கு உன்னால் எப்படி விடை கூற முடிந்தது?’’ என அரசர் கேட்டார்.

‘‘என் தந்தை சொல்லிக் கொடுத்த திருக்குறளில் தான் இந்த விடைகள் உள்ளன’’ என்றான் சிறுவன் அருண்மொழி. இந்த அருண்மொழியே பிற்காலத்தில் பெரிய புராணம் என்ற நூலை எழுதிய சேக்கிழார் ஆவார்.

## திருக்குறள்

1. ‘‘நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.’’

**கருத்து** - அடக்கம் உடையவனின் உயர்ச்சி, மலையை விட மிகப் பெரிது.

2. ‘‘ காலத்தினால் செய்த நன்றி சிறிது எனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது’’

**கருத்து** :- ஒருவன் ஆபத்துக் காலத்திற் செய்த உதவி சிறிதாயினும் அது உலகைவிடப் பெரிது.

3. ‘‘பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின்
நன்மை கடலின் பெரிது.’’

**கருத்து** - பயனை எதிர்பார்க்காமல் செய்த உதவியின் நன்மை கடலைவிடப் பெரியதாகும்.

## சொல் அறிமுகம்

## වචන හඳුනාගනිමු

| | | | |
|---|---|---|---|
| 1. | மனவருத்தம் | - | සිත පසු තැවීම |
| 2. | ஆபத்து | - | අනතුරු |
| 3. | முயல்கிறோம் | - | උත්සහා කරනවා |
| 4. | பறிபோதல் | - | අහිමිවීම |
| 5. | பணிவு | - | කීකරු/යටහත් බව |
| 6. | எதிர்பார்க்காமல் | - | බලාපොරොත්තු නොවූ |
| 7. | பிற்காலம் | - | පසු කාලීන |

## கிரகித்தற் பயிற்சி

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
**පහත දී ඇති ප්‍රශ්නවලට උත්තර ලියමු.**

1. மன்னனின் கேள்விகளுக்குச் சரியான விடை கூறினால் கிடைக்கும் பரிசு யாது?
2. அரசரின் கேள்விகளுக்குச் சிறுவனால் எப்படி விடை கூற முடிந்தது?
3. சிறுவன் பெரியவனானதும் எழுதிய நூல் எது?
4. இக்கதை மூலம் நீர் பெறும் படிப்பினை யாது?
5. பின்வரும் தொடர்கள் யாரால், யாருக்குக் கூறப்பட்டன.

    i. ‘‘ நாளை என்னை அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்.’’

    ii ‘‘என் கேள்விகளுக்கு உன்னால் எப்படி விடை கூற முடிந்தது?’’


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## செயற்பாடு - I

அரசன் கேட்ட வினாக்களுக்குச் சிறுவன் கூறிய விடைகளை இணைப்போம். රජතුමා විසින් අසනලද ප්‍රශ්ණවලට ළමයා විසින් කියනලද උත්තර යා කරමු.

| வினாக்கள் | விடைகள் |
|---|---|
| ⊙ உலகத்தைவிடப் பெரியது | உயர்வு வந்த போதும் பணிவோடு இருப்பவனது அடக்கம் |
| ⊙ மலையைவிட உயரமானது | பயனை எதிர்பார்க்காமல் செய்த உதவி |
| ⊙ கடலைவிடப் பெரியது | ஆபத்துக் காலத்தில் செய்த உதவி |

## செயற்பாடு - II

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (√ ) எனவும் பிழையாயின் (X) எனவும் குறிப்பிடுவோம்.** පහත සඳහන් වාක්‍ය නිවැරදිනම් (X) යනුවෙනුත් වැරදිනම් (√ ) යනුවෙනුත් සඳහන් කරමු.

1. அமைச்சர்கள் எவராலும் அரசனின் கேள்விகளுக்குப் பதில் கூற முடியவில்லை. (..........)
2. தலைமை அமைச்சர் மிக்க மகிழ்ச்சியோடு வீடு திரும்பினார். (..........)
3. சிறுவன் விடை கூற உதவியது பெரிய புராணம் என்ற நூலாகும். (..........)
4. சிறுவன் அரசரின் அமைச்சரானான். (..........)
5. அருண்மொழிக்குத் திருக்குறள் தெரியாது. (..........)

## செயற்பாடு - III

1. கதையில் வந்துள்ள திருக்குறள்களை மனனம் செய்வோம்.
2. கல்வியுடன் தொடர்பான திருக்குறள்களைச் சேகரிப்போம்.

# இலக்கணம்

## தனிவாக்கியம் தொடர் வாக்கியம்

### தனி வாக்கியம்

- தனி வாக்கியத்தில் ஒரு செயல் மட்டும் இருக்கும்.
- ஒரு எழுவாய்யும் ஒரு பயனிலையும் இருக்கும்.
- ஒரு கருத்தை மட்டும் கூறும்.

உதாரணம் :

1. கண்ணன் வந்தான்.
2. நான் பாடம் படித்தேன்.
3. அம்மா சோறு சமைத்தாள்.
4. தம்பி கிரிகெட் விளையாடினான்.
5. ஆசிரியர் பாடசாலை வந்தார்.

### தொடர் வாக்கியம்

- ஒன்றிற்கு மேற்பட்ட செயல்களை கொண்டிருக்கும்.

உதாரணம் :

1. நான் பாடசாலை சென்று பாடம் படித்தேன்.
   (I) நான் பாடசாலை சென்றேன்.
   (II) நான் பாடம் படித்தேன்.

2. மாலா சோறு சமைத்து சாப்பிடுவாள்.
   (I) மாலா சோறு சமைப்பாள்.
   (II) மாலா சாப்பிடுவாள்.

3. ஆசிரியர் வகுப்பரைக்கு வந்து பாடம் படிப்பித்தார்.
   (I) ஆசிரியர் வகுப்பறைக்கு வந்தார்.
   (II) ஆசிரியர் பாடம் படிப்பித்தார்.



இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

4. நான் பாடல் பாடி ஆடினேன்.
   (I) நான் பாடல் பாடினேன்.
   (II) நான் ஆடினேன்.

5. கண்ணன் மேடைக்குச் சென்று பரிசு வாங்கினான்.
   (I) கண்ணன் மேடைக்குச் சென்றான்.
   (II) கண்ணன் பரிசு வாங்கினான்.

## செயற்பாடு - IV

**பின்வரும் தனி வாக்கியங்களைத் தொடர் வாக்கியங்களாக எழுதுக.**

1. விமலா வந்தாள். பாட்டு பாடினாள்.
2. தம்பி கோயிலுக்குச் செல்வான். கடவுளை வணங்குவான்.
3. நான் புத்தகத்தை திறந்தேன். பாடம் படித்தேன்.
4. அவள் நடனம் ஆடினாள். பாட்டு பாடினாள்.
5. அப்பா வீட்டுக்கு வந்தார். சோறு சாப்பிட்டார்.

## செயற்பாடு - V

**பின்வரும் தொடர் வாக்கியங்களைத் தனி வாக்கியங்களாக எழுதுக.**

1. நான் கடைக்குச் சென்று அரிசி வாங்கினேன்.
2. அண்ணா மைதானத்திற்கு சென்று கிரிக்கெட் விளையாடுவான்.
3. நான் புத்தகத்தை எடுத்து ஒரு பாடம் வாசித்தேன்.
4. வைத்தியர் வைத்தியசாலைக்கு வந்து மருந்து கொடுத்தார்.
5. நான் அடுத்த மாதம் இந்தியா சென்று இடங்களைச் சுற்றி பார்ப்பேன்.